**Starting time 12.22 P.M.**

# <u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>

## O.S. No. 31/2017

Deposition of **<u>P.W. 1</u>** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. K.Janaki, Gr. III Bench Clerk of this court, on 19-01-2023 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : குஞ்சம்மாள் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**: என்ன பரிகாரம் வேண்டி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், எனது பக்கத்து நிலத்துக்காரர்கள் பொய்யான பத்திரத்தை வைத்துக்கொண்டு எனக்கு சொந்தமான சொத்தை அனுபவித்து வருவதற்கு தொந்தரவு செய்தார்கள் அதனால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகள் பெயரில் பத்திரம் இருக்கும் விபரம் தெரியுமா என்றால், தெரியும் அது பொய்யான பத்திரம் ஆகும். அந்த பத்திரத்தை ரத்து செய்ய வேண்டி நடவடிக்கை எடுத்தேனா என்றால், அந்த பத்திரத்தை அவர்கள் என்னிடம் காட்டவே இல்லை.

2. ஆரம்பத்தில் தாவா சொத்துக்கள் பழனிமுத்து கவுண்டர் என்பவருக்கு சொந்தமான சொத்துக்கள் என்றால், அதை பற்றி தெரியாது. பழனிமுத்து கவுண்டர் என்பவரிடமிருந்துதான் பிரதிவாதிகளின் தாத்தா கருப்பண்ண படையாச்சி என்பவர் தாவா சொத்துக்களை 27.05.1963 அன்று கிரயம் பெற்றுள்ளார் என்றால், அதைப் பற்றி எனக்குத் தெரியாது. தாவா சொத்துக்களை பிரதிவாதிகளின் தாத்தா

கருப்பண்ண படையாச்சி என்பவர்தான் கிரயம் பெற்றுள்ளார் என்றும், அவருக்கு பின்னிட்டு பிரதிவாதிகள்தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால், சரியல்ல. எனவே, தாவா சொத்துக்களின் உண்மையான உரிமையாளர்கள் பிரதிவாதிகள்தான் என்றும், அவர்களுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் கேட்காமல், நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் மட்டும் கேட்டு தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல.

3. பட்டா வழங்குவதில் தவறு ஏற்பட்டுள்ளதாகவும், எனவே அதை சரி செய்ய வேண்டும் என்று பிரதிவாதிகள் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்து அதன் பேரில் வருவாய்த்துறையினர் என்னை விசாரித்தார்கள் என்றால், RDO அலுவலகத்திலும், வட்டாட்சியர் அலுவலகத்திலும் விசாரித்தார்கள், அப்போது தாவா சொத்துக்கள் யாருக்கு சொந்தம் என்று அவர்களிடம் கூறினேன். அதன் பின்னிட்டுதான் இவ்வழக்கை தாக்கல் செய்தேனா என்றால், சரியல்ல, இவ்வழக்கு தாக்கல் செய்து பின்னர்தான் வருவாய்த்துறையினர் விசாரித்தார்கள். நான் சொல்வது தவறு என்றும் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவின்படி வருவாய்த்துறையினர் என்னை விசாரத்த பின்னர் அவசர அவசரமான இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. பிரதிவாதிகளுக்கு சொந்தமான சொத்துக்களுக்கு தவறாக பட்டா பெற்று தாவா சொத்துக்களை அபகரிக்க வேண்டி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

4. தாவா சொத்துக்கள் சம்பந்தமாக பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் எதுவும் என் பெயரிலோ அல்லது என் கணவர் பெயரிலோ உள்ளதா என்றால், இல்லை, பட்டா மட்டும்தான் உள்ளது. நான் தாவா சொத்துக்களை அனுபவித்து வருவதாக சொல்வது பொய் என்றும், பிரதிவாதிகள்தான் தாவா சொத்துக்களை அனுபவித்து வருகிறார்கள் என்றால், சரியல்ல. 1996-ம் ஆண்டிற்கு பின்னிட்ட கந்தாய ரசீதுகள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், கிராம நிர்வாக அலுவலரிடம்

கேட்டேன் அவர் தரவில்லை, அதனால் தாக்கல் செய்யவில்லை.

5. தாவா சொத்து சம்பந்தமாக தவறாக பட்டா வழங்கப்பட்டது தெரிய வந்ததால்தான் கந்தாய ரசீது வழங்கவில்லை என்றும், தாவா சொத்துகளின் உண்மையான உரிமையாளர்கள் பிரதிவாதிகள்தான் என்றும், எனவே தாவா சொத்துக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால், சரியல்ல. தாவா சொத்து எனது அனுபவித்தில் இருந்து வருவதற்காக வேண்டி அடங்கல் பதிவேடு எதையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. தாவா சொத்து உண்மையிலேயே எனது அனுபவத்தில் இருந்திருந்தால் அதற்காக வேண்டி அடங்கல் பதிவேடு தாக்கல் செய்திருப்பேன் என்றும், அதுபோல் எனது அனுபவத்தில் இல்லாததால்தான் அடங்கல் பதிவேடு தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல.

6. நான் சொல்வதுபோல் தாவா சொத்துக்கும், செல்லமுத்து படையாச்சி, சிக்க கவுண்டர், மூக்கையா கவுண்டர், கோழிப்பெரியண்ணன் ஆகியோர்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால், சரியல்ல. அதேபோல் 1985-ம் ஆண்டிற்கு முன்பிருந்தே தாவா சொத்தை என் கணவர் அனுபவித்து வந்ததாக சொல்வது பொய் என்றால், சரியல்ல. மூக்கையா கவுண்டர், கோழிப்பெரியண்ணன் என்ற நபர்கள் உள்ளார்களா என்றால், அவர்கள் யாரும் இல்லை. ஊரில் இல்லாத நபர்கள் பெயரை தவறுதலாக பட்டாவில் சேர்க்கப்பட்டதால் தான் அதை நீக்க வேண்டி பிரதிவாதிகள் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், அதை தெரிந்து கொண்டு நான் தவறாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு சொந்தமான சொத்து என்பதால் அதை அவர்கள் என்னிடம் விலைக்கு கேட்க வேண்டிய அவசியமே இல்லை என்றால், சரியல்ல. அதேபோல் 21.09.2017 அன்று பிரதிவாதிகள் தாவா சொத்திலிருந்து என்னை வெளியேற்ற முயற்சித்தாக சொல்வது பொய் என்றால், சரியல்ல. அதுபோன்ற சம்பவம் நடந்திருந்தால் அது குறித்து தெளிவாக சொல்லியிருப்பேன் என்றும், அதுபோன்ற சம்பவம் எதுவும் நடக்காததால்தான் எனது நிரூபண வாக்குமூலத்திலும், தாவாவிலும் முரண்பட்டு கூறியுள்ளேன்

என்றால், சரியல்ல. எனவே தாவா சொத்தின் உண்மையான உரிமையாளர்களான பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் கேட்காமல், நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால், சரியல்ல. மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற உத்தரவின் பேரில் வருவாய்த்துறை என்னை விசாரித்ததை இவ்வழக்கில் தெரிவிக்காமல் உண்மையை மறைத்து இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளதால், இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால், சரியல்ல. தாவா சொத்து எனது அனுபவத்திலேயே இல்லை என்றும், பிரதிவாதிகள்தான் தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்பதால், வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time : 12.47 P.M.

**ஒப்பம்/- ஜி.யுவராஜ்**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**